2012 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

கூடுதல் வகுப்பறை

***6888—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி உதவியுடன் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி VII–இல் 30 வகுப்பறைகள், ஒரு ஆய்வுக் கூடம், 5 கழிவறைகள், குடிநீர் வசதி ஆகிய அடிப்படை வசதிகள் ரூ.116.94 இலட்சத்தில் கட்டப்பட்டு, 23–10–2008–ல் ஒப்படைக்கப்பட்டு, 29–10–2009–லிருந்து கட்டடம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்காணும் பள்ளிக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் (SSA) மூலம் ஏற்கெனவே 3 வகுப்பறைகள், ஒரு பள்ளி தொகுப்புக் கருத்தாய்வு மையம் கட்டி முடிக்கப்பட்டு, 2007 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த நிலையில் உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கிமூலம் புதியதாக கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிய வரம் தரும் எங்கள் குல தெய்வமே, மாண்புமிகு அம்மா! தாகத்தால் தவித்த உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் தந்து, தாகம் தீர்த்த தாயே! உங்களுக்குக் கோடானுகோடி நன்றிகள் அம்மா!

சுத்தம் கருதி, மக்கள் சுகாதாரத்தோடும், பாதுகாப்பாக வாழ்ந்திட உளுந்தூர்பேட்டை பேரூராட்சிக்கு ரூபாய் 29 கோடியே 48 இலட்சம் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தந்த, ஓங்குபுகழ் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளை அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே கிட்டத்தட்ட 1,300 மாணவர்கள் பயில்கின்றனர். அங்கே இப்போது 30 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் இருக்கிறது. ஆனால் அதற்கு முன்பாக சீமை ஓடுகளால் ஆன பழைய கட்டடம் இருந்து வருகிறது. அது 'தானே' புயலால் பாதிக்கப்பட்டு, அந்தப் பள்ளியின் பழைய கட்டடங்கள் எல்லாம் பழுதடைந்துள்ளன. ஆகவே, அங்கு இருக்கின்ற மாணவர்கள் இடவசதி இல்லாமல் மரத்தடியிலே இருந்து படிக்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, நிறைய பள்ளிகளுக்கு நிதியை ஒதுக்கிட தமிழகம் கல்வியில் சிறந்த ஒரு மாநிலமாக விளங்கிட பள்ளிக் கல்வித் துறைக்கு மாபெரும் நிதியை ஒதுக்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், அங்கேயுள்ள பள்ளி மாணவர்களின் நலனைக் கருதி, நபார்டு வங்கித் திட்டத்தின் மூலமாக கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, வருங்காலத்தில் அம்மாவின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.